2022-ஏப்ரல் முதல் 2023 மார்ச் முடிய ஆண்டறிக்கை

# கிராம முன்னேற்றம் மற்றும் பெண்கள் கல்வி அறக்கட்டளை

# RURAL DEVELOPMENT AND WOMEN EDUCATIONAL TRUST

R.NO : 394/2009






**S.M. VELU** FOUNDER AND SECRETARY

Address: No 2/11A Velur pettai Kilpakkam (Post)

Arakkonam (Taluk) Ranipettai (disinct)

Tamilnadu-631003

Contact No +917094210513, Mail id – rdwet2009@[illegible]al.com

## பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேற்வதற்கான பயிற்சி கூட்டங்கள்

29.06.2022, 14.12.2022 மற்றும் 19.02.2023 ஆகிய தேதிகளில் கிராம முன்னேற்றம் மற்றும் பெண்கள் கல்வி அறக்கட்டளை அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை திருமதி கௌசல்யா அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார். 225 நாட்கள் பயிற்சி பெற்றுக்கொண்டனர். இப்பயிற்சியில் குறிப்பாக பெண்கள் தாங்கள் சுயமாக வேலை செய்து சம்பாதிக்கலாம். அதற்காக டைலரிங், சிறு சிறு கடைகள் வைப்பது, அரசு உதவிகள் பெறுவது, ஆட்டு பண்ணை, கோழி பண்ணை, மாட்டு பண்ணை அமைப்பது போன்ற தொழில்கள் மூலமாக பெண்கள் யாருடைய எதிர்பார்ப்பும் இன்றி தாமாகவே பொருளாதாரத்தில் முன்னேறுவது. இவைகளை செய்ய அனைவருக்கும் கல்வி அவசியம். இந்த கல்வியை தங்கள் பிள்ளைகளுக்கும் படிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

### வேலைவாய்ப்பு

பெண்கள் எந்த ஒரு வேலையை செய்ய வேண்டுமானாலும் கல்வி அவசியம். அதே போன்று பெண்கள் ஆண்களுக்கு நிகராக எல்லா துறைகளிலும் சமமான வேலை செய்கின்றார்கள். குறிப்பாக விவசாயம் முதல் அலுவலக பணிகள், ஓட்டுநர் பணி, மருத்துவ பணிகள் என அனைத்து பணிகளிலும் வேலை வாய்ப்பு பெற்று வருவதால் இதை பயன்படுத்திக்கொண்டு அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலையில் சேர்ந்து தங்கள் வேலை வாய்ப்புகளை பெற்று இந்த சமுதாயத்தில் பெண்கள் முன்னேற வேண்டும். பெண்கள் கல்வி, வேலை வாய்ப்பு, சுயதொழில் இவைகளை நன்கு பயன்படுத்திக்கொண்டு இந்த சீர்கெட்ட கலாச்சாரத்திலிருந்தும் குழந்தை திருமணத்திலிருந்தும் தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

..2

நான் இன்னமும் கூட அதாவது பெண்கள் பல்வேறு விதத்தில் பாதிக்கப்படுகின்றோம். குறிப்பாகை பெண்ணை மதத்தின் பெயரிலும், கலாச்சாரத்தின் பெயரிலும், ஜாதியின் பெயரிலும், பல்வேறு அடக்குமுறைகளுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும், நம்மை அடிமைகளாக்கப்பட்டு வருகின்றோம். நம்மை விளம்பர பொருட்களாகவும், போதை பொருட்களாகவும், நம்மை அடிமைப் படுத்தப்பட்டு வருகின்றோம். நாம் இவைகளிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்றால் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும், வேலைவாய்ப்பில் முன்னேற வேண்டும், கல்வியில் முன்னேற வேண்டும் போன்ற பல்வேறு பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. அரக்கோணம் வட்ட வழங்கல் அலுவலர், திருமதி பரமேஸ்வரி, வட்டாட்சியர், மோகன், B.D.O. சாந்தி மற்றும் ரேவதி குமாரி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டு பயிற்சிகள் வழங்கினார்கள்.

இப்பயிற்சியில் காவனூர், முதூர், கோணலம், முள்வாய், காவேரிபுரம், சாலை, குன்னத்தூர் நாகவேடு போன்ற கிராமங்களிலிருந்து கலந்துக்கொண்டனர்.

வருகின்றது. பிள்ளைகள் சிறு வயது முதலே கல்வி கற்க வேண்டும். குழந்தை தொழிலாளர்களாக செல்வதை தடை செய்ய வேண்டும். நல்ல கல்வி, வேலை வாய்ப்பு, சமூக அந்தஸ்து பெற வேண்டும் என பல்வேறு விழிப்புணர்வுகளை வழங்கி வருகின்றார்கள். ஆனால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தொடர்ந்து குழந்தை தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். எனவே நாம் அனைவரும் குழந்தைகளின் எதிர்காலத்தை மனதில் வைத்து ஒவ்வொரு கிராமமாக தெருமுனை பிரச்சாரம், பிட்நோட்டீஸ் அல்லது எப்படியெல்லாம் பிரச்சாரம் செய்ய வாய்ப்புள்ளதோ அப்படி நாம் விழிப்புணர்வு கொடுக்க வேண்டும் என விழிப்புணர்வு பயிற்சி கொடுக்கப்பட்டது. இப்பயிற்சியில் 128 பிள்ளைகள் 260 பெற்றோர்கள் போரூர், வளர்புரம், இச்சிப்புத்தூர், ஆனைப்பாக்கம், தாளிக்கால், கரிக்கல், போளிப்பாக்கம், நாகவேடு, ரங்காபுரம், உளியம்பாக்கம், கீழ்பாக்கம், செந்தில் நகர் போன்ற கிராமங்களிலிருந்து வந்து கலந்துக்கொண்டனர்.

## சுற்று சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை விவசாயம் பயிற்சி கூட்டங்கள்

கிராம முன்னேற்றம் மற்றும் பெண்கள் கல்வி அறக்கட்டளை சார்பாக 15 கிராமங்களில் சுற்றுசூழலை பாதுகாத்தல் மற்றும் இயற்கை வேளாண்மையை பாதுகாப்பது அழிந்து வரும் இயற்கை விவசாயத்தை பாதுகாப்பது குறித்த தெருமுனை விழிப்புணர்வு மற்றும் பயிற்சி கூட்டங்கள் நடைபெற்றது. இக்கூட்டங்கள் அனைத்தும் அறக்கட்டளையின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. (தலைவர் திருமதி அருணா, செயலாளர் திரு சிமாவேலு, பொருளாளர் திருமதி முனியம்மாள் ஆகியோர் தலைமையில்) இதில் சிறப்பு அழைப்பாளர்கள் இன்பநாதன், தனபால், கிருஷ்ணன், முரளி ஆகியோர் கலந்துக்கொண்டு சுற்றுசூழல் இயற்வை விவசாயம் குறித்து விழிப்பணர்வு பயிற்சிகள் வழங்கினார்கள்.

இந்த கூட்டங்களில் இயற்கை வளங்கள் அழிக்காமல் பாதுகாப்பது மரங்கள் வளர்ப்பது, இயற்கை வள ஆதாரங்களை அழிப்பதால் மழையெல்லாம் இல்லாமல் இருப்பது, இதனால் விவசாயம் அழிந்து வருகின்றது. இதனால் உணவு தட்டுப்பாடு ஏற்படுகின்றது. கால்நடைகளும் தண்ணீர் உணவின்றி பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது. காடுகளையும், இயற்கை வள ஆதாரங்களையும் அரிப்பதால் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றது. எனவே நாம் இவைகளை பாதுகாக்க இயற்கை வள ஆதாரங்களை அதிகப்படுத்தி சுற்றுப்புற சூழலை பாதுகாக்க வேண்டும். இந்த முயற்சிகளை நாம் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் அத்துடன் இது குறித்த விழிப்புணர்வினை விழிப்புணர்வு வீதி நாடகம் தெருமுறை பிரச்சார கைபிரதிகள், கிராமம் கிராமமாக பிரச்சாரம் கூட்டங்கள் போன்ற யுக்திகளை பயன்படுத்தி நாம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். கிராம அளவிலான பயிற்சி கூட்டங்கள் இவைகளை குறித்து பேசப்பட்டது. இவைகளை தொடர்ந்து இயற்கை விவசாயத்தை பாதுகாப்பு வேண்டும். செயற்கை விவசாயத்தின் மூலமாக நமக்கு அநேக பிரச்சனைகளை சந்திக்க வேண்டி உள்ளது.


இயற்கை விவசாயம் கடந்த காலங்களில் தழை, சாணம், குப்பை எரு, ஏரிவண்டல் மண் போன்ற உரங்களை போட்டு பயிர் செய்வார்கள். கம்பு, கேழ்வரகு, திணை, சானம், வரகு மற்றும் சத்துநிறைந்த நெல் வகைகள் பயிரிடுவார்கள். எந்த நோய் நொடிகளும் இன்றி ஆரோக்கியமாக நீண்ட நாட்கள் உயிர்வாழ்ந்து வந்துள்ளார்கள். இப்போது பயிர் முளைக்க வைப்பது துவங்கி அறுவடை செய்யும் வரை பல்வேறு செயற்கை ரசாயன உரங்களை போட்டு பயிரிடுவதால் பல்வேறு நோய்களுக்கு நாம் கட்டுப்பட வேண்டி உள்ளது. எனவே வருகின்ற தலைமுறையினர் சிறந்த ஆரோக்கியமாக நீண்டநாள் உயிர் வாழ நாம் இயற்கை உரங்களை பயன்படுத்துவோம். மண்புழு உரம் தயாரித்து பயிர்களுக்கு போடுவது பூச்சைகளை விரட்ட பஞ்சகாவியம், சோப்பு கரைச்சல், மாட்டு சோடியம் போன்ற இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும் என பயிற்சி கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் விவசாய நபரை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரிப்பது குறித்து விளக்கப்பட்டது.

உரங்கள் பயன்படுத்தி விளைக்கப்பட்ட தானியங்களை உண்டதால் நீண்ட நாட்களாக உயிர்வாழ்ந்து வந்தார்கள். இத்துடன் இப்போது நாம் உண்ணும் உணவில் எந்த சத்தும் கிடையாது. நம்முடைய உடல் ஏற்றுக்கொள்ள முடியாத உணவு பழக்கங்கள் கையாள்வதல் (உ.ம்) நூர்டுல்ஸ், பீசா, வருத்த சோறு ஏற்கனவே பலநாட்களாக பல்வேறு ரசாயணங்களை பயன்படுத்து பதப்படுத்தப்பட்ட உணவு உட்கொள்வதால் உமக்கு சிறு குழந்தைகளுக்கே பல்வேறு வியாதிகள் வருகின்றது. இயற்கை வைத்தியங்களை பயன்படுத்தவும், பழங்காள உணவு பழக்கங்கள் சாப்பிடவும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

நமது உடல் ரீதியாக ஏற்படும் எந்த நோய்க்கும் ஆங்கில மருத்துவம் உடனடியாக நேர் அல்லது வலி குறையுமே தவிர அந்த மருந்து மாத்திரை நிரந்தர தீர்வாகாது என்பன உட்பட பல்வேறு ஆலோசனைகளையும் விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.


இலவச மருத்துவ முகாமில் முருங்கை கீரை காபி, முளைக்கட்டிய தானியங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு முகாமிலும், 200 முதல் 250-க்கும் அதிகமான பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள். நிகழ்ச்சிக்கு ராமன் அனைவரையும் வரவேற்றார். சங்க செயலாளர் தலைமையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். கிராம மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கினார்கள் முனியம்மா அவர்கள் நன்றி கூறினார்.














OPPO Reno4 Pro
Sam Maria



2022-ஏப்ரல் முதல் 2023 மார்ச் முடிய ஆண்டறிக்கை

கிராம முன்னேற்றம் மற்றும் பெண்கள் கல்வி அறக்கட்டளை

# RURAL DEVELOPMENT AND WOMEN EDUCATIONAL TRUST

R.NO : 394/2009





**S.M. VELU** FOUNDER AND SECRETARY

Address: No 2/11A Velur pettai Kilpakkam (Post)

Arakkonam (Taluk) Ranipettai (district).

Tamilnadu-631003

Contact No +917094210513 Mail id – rdwet2009@gmail.com